**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் திண்டுக்கல்**

முன்னிலை : **திரு.எஸ்.பாக்கியராஜ், பி.எஸ்.சி., பி.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**2026 –ம் ஆண்டு ஆகஸ்ட் 05–ம் நாள் புதன்கிழமை**
**STC. No. 783/2024**
**CNR.No.TNDG03-065880-2024**
**கு.வி.மு.ச. பிரிவு 255–ன் கீழ் தீர்ப்புரை**

| | | |
|---|---|---|
| 1. | **வழக்கின் வரிசை எண்** | **சு.மு.வி.வ.எண். 783/2024** |
| 2. | **குற்றம் நடந்த தேதி** | 07.02.2024தேதியிட்ட கேட்பறிவிப்பு கிடைக்கப் பெற்றதிலிருந்து 15 நாட்கள் கழித்து, 16வது நாள் |
| 3. | **புகார்தாரரின் பெயர் மற்றும் முகவரி** | **திரு.ராஜா(70/2024),<br>த.பெ.சுப்பிரமணி,<br>க.எண்.4/8,வாழ்க வளமுடன் தெரு,<br>LGB காம்பவுண்ட்,<br>திண்டுக்கல் டவுன், திண்டுக்கல்.** |
| 4. | **எதிரியின் பெயர் மற்றும் முகவரி** | **வாணி சரஸ்வதி(60/2024),<br>க/பெ.சௌந்திரபாண்டியன்,<br>எண்.20, அபி விக்னேஷ் இல்லம்,<br>இந்திரா நகர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திண்டுக்கல்.** |
| 5. | **குற்றச்சாட்டின் விவரம்** | எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக |
| 6. | **எதிரியின் வாதுரை** | பொய் வழக்கு, குற்றத்தை மறுத்தார் |
| 7. | **தீர்ப்பின் முடிவு** – எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது. | |
| 8. | **தீர்ப்பு பகரப்பட்ட தேதி** | **05.08.2026** |
| 9. | **தீர்வுக்கான காரணங்கள் சுருக்கமான உரை –** | |

| | |
|---|---|
| | **முடிவாக,** எதிரி தரப்பில் ஒரு நிகழ்தற்தக்க எதிர்வழக்கை முன்னிறுத்தி **(Preponderance of Probabilities)** நிலைநாட்டியுள்ளார். இதன்மூலம் அவர் சட்டப்பூர்வ அனுமானங்களை முறியடித்து விட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிரி மீது சுமத்தப்பட்ட நிரூபிக்கும் சுமையை அவர் விடுவித்துக் கொண்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற07.04.2021 நாளிட்டR.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | CASE SUMMARY | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | **வாணி சரஸ்வதி(60/2024), க/பெ.சௌந்திரபாண்டியன், எண்.20, அபி விக்னேஷ் இல்லம், இந்திரா நகர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல்.** | | |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | **27.03.2024** | **-** | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | Not applicable | | |
| (iv) | **The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe** | : | **25.11.2024** | | |
| (v) | **Filing of all** | : | **Crl.M.P.No.** | **Date of Filing** | **Result** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code** | | - | | - | - |
| (vi) | **Date of examination in-chief and cross-examination of a witness** | : | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | | | **PW1** | ராஜா | **24.06.2025** | **05.08.2026** |
| (vii) | **Date of examination of the accused U/Sec 313 of the Code** | : | - | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/productio nas the case may be; and** | : | Nil | | | |
| (ix) | **Grant of stay by superior Courts and the results thereof** | : | **Sessions Court CMP Numbers** | | **High Court No and Date of Stay** | **Result** |
| | | | - | | - | - |

இத்தனி நபர் புகார் 27.03.2024 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக **05.08.2026**ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தது. புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் **Mr.A.Padmanathan** அவர்கள் ஆஜராகி வாதுரைள்ளனர் எதிரி தரப்பில் வழக்கறிஞர் **Mr.S.பாலசுப்பிரமணியன்** அவர்கள் ஆஜராகி உள்ளனர். இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் வழக்காவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

1. **இவ்வழக்கின்** எதிரி மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881—ன் பிரிவு 138ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் எனவும், எதிரிக்கு உரிய தண்டனை வழங்கி, புகார்தாரருக்கு உரிய இழப்பீடு வேண்டியும் புகார்தாரரால் புகார்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **புகார்தாரர் வழக்கின் சுருக்கம் :**

திரு.ராஜா இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். புகார்தாருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **23.01.2024 தேதியிட்ட காசோலை எண். 335060 தொகை ரூ.3,00,000/—** கொண்ட " **IDBI வங்கி, M/s.City Plaza, B.No.11 கிளை, திண்டுக்கல்** " கிளைக்குரிய காசோலையை எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி காசோலையை புகார்தாரர் அவரது வங்கியான " **ICICI வங்கி, ஆர்.எம்.காலனி, திண்டுக்கல்**"கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "**Funds Insufficient**" என்ற காரணத்தினால் **30.01.2024** தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு **06.02.2024** தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பினை பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை. எனவே எதிரி காசோலை மோசடி குற்றம் புரிந்துள்ளதாகவும், எதிரி மீது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138—ன் கீழ் நடவடிக்கை எடுத்து இழப்பீடு பெற்றுத்தரக் கோரி புகார்தாரரால் இப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **இவ்வழக்கில்** எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு எதிரான குற்றசாட்டின் சாராம்சத்தினை கு.வி.மு.ச.பிரிவு 251ன்படி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே வழக்கு புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு என வகை செய்யப்பட்டது.

**4. புகார்தாரர் தரப்பு சாட்சிய விவரம் :**

எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு, புகார்தாரார் தரப்பில் புகார்தாரர் **திரு. ராஜா** என்பவர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் **பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.12** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | **23.01.2024 தேதியிட்ட காசோலை எண். 335060 தொகை ரூ.3,00,000/-** | .. **பு.சா.ஆ.1** .. ஆகவும் |
| 2. | **23.01.2024 தேதியிட்ட கலெக்சனுக்கு செலுத்தியதற்கான ஆதாரம்** | .. **பு.சா.ஆ.2** .. ஆகவும் |
| 3. | **30.01.2024 தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ** | .. **பு.சா.ஆ.3** .. ஆகவும் |
| 4. | **06.02.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு** | .. **பு.சா.ஆ.4** .. ஆகவும் |
| 5. | **06.02.2024 தேதியிட்ட தபால் ரசீது** | .. **பு.சா.ஆ.5** .. ஆகவும் |
| 6. | **06.02.2024 தேதியிட்ட Track Consignment** | .. **பு.சா.ஆ.6** .. ஆகவும் |
| 7. | **வங்கி ஸ்டேட்மெண்ட்** | .. **பு.சா.ஆ.7** .. ஆகவும் |
| 8. | **12.03.2024 தேதியிட்ட பதில் அறிவிப்பு** | .. **பு.சா.ஆ.8** .. ஆகவும் |
| 9. | **13.03.2024 தேதியிட்ட புகார் மனு** | .. **பு.சா.ஆ.9** .. ஆகவும் |
| 10 | **13.03.2024 தேதியிட்ட பதிவுத்தபால் ரசீது** | ..**பு.சா.ஆ.10** .. ஆகவும் |
| 11 | **14.03.2024 தேதியிட்ட புகாரை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை** | ..**பு.சா.ஆ.11** .. ஆகவும் |
| 12 | **16.03.2024 தேதியிட்ட Tract complaint status** | ..**பு.சா.ஆ.12**.. ஆகவும் |

குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழான விசாரணை நடவடிக்கைகள் இந்நீதிமன்றத்தால் விலக்களிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1) எதிரி மீதான மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138–ன் கீழான குற்றம் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்தின் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) எதிரி ஒரு நிகழ்தற்தக்க எதிர் வழக்கை முன்னிறுத்தி அதை நிலைநாட்டி சட்டப்பூர்வ அனுமானங்களை முறியடித்து தன் மீதான நிரூபிக்கும் சுமையை விடுவித்துக் கொண்டாரா? என்பதுவேயாகும்.

**6. புகாரர்தாரர் தரப்பில்** எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட **திரு. ராஜா இவ்வழக்கின் புகார்தாரர்.** புகார்தாருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **23.01.2024 தேதியிட்ட காசோலை எண். 335060 தொகை ரூ.3,00,000/–** கொண்ட " **IDBI வங்கி, M/s.City Plaza, B.No.11 கிளை, திண்டுக்கல்** " கிளைக்குரிய காசோலையை எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி காசோலையை புகார்தாரர் அவரது வங்கியான " **ICICI வங்கி,**

**ஆர்.எம்.காலனி, திண்டுக்கல்"**கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "**Funds Insufficient**" என்ற காரணத்தினால் **30.01.2024** தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு **06.02.2024** தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பினை பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

**7. எதிரி** மாறான நிரூபணத்தின் மூலம் புகார்தாரரின் வழக்கை உரிய சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் மூலம் முறியடித்துள்ளனரா? என்று பார்க்கையில், எதிரி தரப்பில் **"பொய்வழக்கு "** என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட எதிர் வாதங்களை நிரூபணம் செய்யும் பொருட்டு மற்றும் புகார்தாரர் தரப்பு அனுமானங்களை முறியடிக்க வேண்டி எதிரிகள் தரப்பில் பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். பு.சா.1 தனது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் **"எதிரிகள் வழக்கு காசோலை தொகையை செலுத்திவிட்டார் என்றால் சரிதான். நான் வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பப்படவில்லை. வழக்கிலிருந்து எதிரிகளை விடுவிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை"** என குறிப்பிட்டுள்ளார். மேற்படி பு.சா.1 ன் குறுக்கு விசாரணையில் பரிசீலனை செய்து பார்க்கையில் எதிரி தரப்பில் காசோலைக்குண்டான தொகை செலுத்தப்பட்டு அதுவும் புகார்தாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை காணமுடிகிறது. எதிரி தரப்பில் காசோலைக்குண்டான தொகை செலுத்தப்பட்டு புகார்தாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் எதிரிக்கு தண்டனை வழங்க

வேண்டிய அவசியம் எழவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8. முடிவாக,** எதிரி மீதான மாற்று முறையாவணங்கள் சட்டம் 1881 சட்டப்பிரிவுகள் 138—ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி மாற்றுமுறையாவணங்கள் சட்டம், 1881 சட்டப்பிரிவுகள் 138—ன் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் படி உத்தரவிடப்படுகிறது. எதிரி மற்றும் அவரது பிணையதாரர்கள் பிணைப்பத்திரம் ஏதேனும் எழுதிக்கொடுத்திருந்தால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு **2026—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05—ம் நாள் வெள்ளிக்கிழமை** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.08.05 16:15:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்

**<u>பின் இணைப்பு</u>**

**<u>1. புகார்தாரர் தரப்பு சாட்சி</u>**

**1. பு.சா.1 — திரு. ராஜா**

**<u>2. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | **23.01.2024 தேதியிட்ட காசோலை எண். 335060 தொகை ரூ.3,00,000/—** | .. **பு.சா.ஆ.1** .. ஆகவும் |
| 2. | **23.01.2024 தேதியிட்ட கலெக்சனுக்கு செலுத்தியதற்கான ஆதாரம்** | .. **பு.சா.ஆ.2** .. ஆகவும் |

| | | |
|---|---|---|
| 3. | 30.01.2024 தேதியிட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ | .. பு.சா.ஆ.3 .. ஆகவும் |
| 4. | 06.02.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு | .. பு.சா.ஆ.4 .. ஆகவும் |
| 5. | 06.02.2024 தேதியிட்ட தபால் ரசீது | .. பு.சா.ஆ.5 .. ஆகவும் |
| 6. | 06.02.2024 தேதியிட்ட Track Consignment | .. பு.சா.ஆ.6 .. ஆகவும் |
| 7. | வங்கி ஸ்டேட்மெண்ட் | .. பு.சா.ஆ.7 .. ஆகவும் |
| 8. | 12.03.2024 தேதியிட்ட பதில் அறிவிப்பு | .. பு.சா.ஆ.8 .. ஆகவும் |
| 9. | 13.03.2024 தேதியிட்ட புகார் மனு | .. பு.சா.ஆ.9 .. ஆகவும் |
| 10 | 13.03.2024 தேதியிட்ட பதிவுத்தபால் ரசீது | ..பு.சா.ஆ.10 .. ஆகவும் |
| 11 | 14.03.2024 தேதியிட்ட புகாரை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை | ..பு.சா.ஆ.11 .. ஆகவும் |
| 12 | 16.03.2024 தேதியிட்ட Tract complaint status | ..பு.சா.ஆ.12.. ஆகவும் |

3. <u>எதிரி தரப்பு சாட்சிகள்</u> – இல்லை

4. <u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.08.05 16:15:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்